பிரஸார் பாரதி

அகில இந்திய வானொலி, சென்னை - 4

03 06 2026 WEDNESDAY 630 PM

வணக்கம் - மாநிலச்செய்திகள்

தலைப்புச் செய்திகள்

1. விமான எரிபொருள் விலை சீராக இருப்பதை உறுதி செய்வதற்கு ஏதுவாக, 10 ஆயிரம் கோடி ரூபாய் மதிப்பிலான நிதியத்தை ஏற்படுத்துவதற்கு மத்திய அமைச்சரவை ஒப்புதல் அளித்துள்ளது.

2. விளையாட்டுத்துறை கட்டமைப்பு வசதிகளை மேம்படுத்துவதற்கு தேவையான அனைத்து உதவிகளும் வழங்கப்படும் என்று மத்திய அரசு உறுதி அளித்துள்ளதாக தமிழக அரசு கூறியுள்ளது.

3. தமிழகத்திலிருந்து மாநிலங்களவைக்கு ஒரு உறுப்பினரை தேர்ந்தெடுப்பதற்காக நடைபெறவுள்ள இடைத்தேர்தலில் கூட்டணிக் கட்சியான காங்கிரஸ் போட்டியிடும் என்று த.வெ.க அறிவித்துள்ளது.

4. சட்டம் ஒழுங்கு முறையாக பராமரிக்கப்படுவதை உறுதி செய்வதற்கு தேவையான நடவடிக்கைகளை த.வெ.க. அரசு மேற்கொள்ள வேண்டும் என்று அஇஅதிமுக வலியுறுத்தியுள்ளது.

5. இந்தோனேஷிய ஓப்பன் பேட்மிண்டன் போட்டியில் இந்தியாவின் ஆயுஷ் ஷெட்டி காலிறுதிக்கு முந்தைய சுற்றுக்கு முன்னேறியுள்ளார்.

>>>><<<<

விமான எரிபொருள் விலை சீராக இருப்பதை உறுதி செய்வதற்கு ஏதுவாக, 10 ஆயிரம் கோடி ரூபாய் மதிப்பிலான நிதியத்தை ஏற்படுத்துவதற்கு மத்திய அமைச்சரவை ஒப்புதல் அளித்துள்ளது.

இன்று புதுதில்லியில் பிரதமர் திரு. நரேந்திர மோடி தலைமையில் நடைபெற்ற அமைச்சரவைக் கூட்டத்தில் இதற்கான முடிவு மேற்கொள்ளப்பட்டது.

இதனை செய்தியாளர்களிடம் தெரிவித்த தகவல் ஒலிபரப்புத்துறை அமைச்சர் திரு. அஷ்வினி வைஷ்ணவ், இதன்மூலம் சிவில் விமான போக்குவரத்துத் துறையை சார்ந்த 77 லட்சம் ஊழியர்களின் நலன் உறுதி செய்யப்பட்டுள்ளதாக குறிப்பிட்டார்.

மேற்காசிய பிரச்சினை காரணமாக, விமான எரிபொருள் விலை இரண்டரை மடங்கு அதிகரித்திருப்பதையும் அமைச்சர் சுட்டிக்காட்டினார்.

இதன் பாதிப்பிலிருந்து விமான நிறுவனங்களை பாதுகாக்கும் நோக்கில், இந்த நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டிருப்பதாகவும் அவர் கூறினார்.

இதன் செயலாக்கத்தை கண்காணிப்பதற்கென குழு ஒன்று ஏற்படுத்தப்படும் என்றும் அவர் தெரிவித்தார்.

சிவில் விமான போக்குவரத்து, பெட்ரோலியம் மற்றும் செலவினங்கள் துறையின் பிரதிநிதிகள் இந்தக் குழுவில் இடம்பெறுவார்கள் என்றும் அவர் கூறினார்.

36 நாட்களுக்கு இந்த நிதியம் செயல்பாட்டில் இருக்கும் என்றும் திரு. அஷ்வினி வைஷ்ணவ் தெரிவித்தார்.

மத்திய அமைச்சரவையின் இந்த முடிவினை வரவேற்றுள்ள தகவல் ஒலிபரப்புத்துறை இணையமைச்சர் டாக்டர் எல். முருகன், பிரதமர் திரு. நரேந்திர மோடி தொலைநோக்குப் பார்வையுடன் இந்த நடவடிக்கையை மேற்கொண்டுள்ளதாக குறிப்பிட்டுள்ளார்.

**>>>><<<<**

தமிழகத்தின் விளையாட்டுத்துறை கட்டமைப்பு வசதிகளை மேம்படுத்துவதற்கு தேவையான அனைத்து உதவிகளும் வழங்கப்படும் என்று மத்திய அரசு உறுதி அளித்துள்ளதாக மாநில அமைச்சர் திரு. ஆதவ் அர்ஜுனா கூறியுள்ளார்.

இன்று புதுதில்லியில், மத்திய விளையாட்டுத்துறை அமைச்சர் திரு. மன்சுக் மாண்டவியாவை சந்தித்து, தமிழகத்திற்கான கோரிக்கை மனுவை வழங்கிய பின்னர் வெளியிட்டுள்ள செய்திக்குறிப்பில் அவர் இதனை தெரிவித்துள்ளார்.

விளையாட்டுத் துறையை ஊக்குவிப்பதற்காக தமிழக அரசு மேற்கொண்டு வரும் நடவடிக்கைகளுக்கு மத்திய அமைச்சர் பாராட்டு தெரிவித்ததாகவும் திரு. ஆதவ் அர்ஜுனா அந்த செய்திக்குறிப்பில் குறிப்பிட்டுள்ளார்.

**>>>><<<<**

தமிழகத்திலிருந்து மாநிலங்களவைக்கு ஒரு உறுப்பினரை தேர்ந்தெடுப்பதற்காக நடைபெறவுள்ள இடைத்தேர்தலில் த.வெ.க. கூட்டணியில் இடம்பெற்றுள்ள காங்கிரஸ் போட்டியிடும் என்று அறிவிக்கப்பட்டுள்ளது.

த.வெ.க. தலைவரும், முதலமைச்சருமான திரு. விஜய் இதற்கான அறிவிப்பினை இன்று வெளியிட்டார்.

முன்னதாக, காங்கிரஸ் கட்சியின் மூத்த தலைவர்கள் திரு. விஜயை சந்தித்து, இந்த இடத்தை தங்களுக்கு ஒதுக்குமாறு கோரிக்கை விடுத்திருந்தனர்.

**>>>><<<<**

விவசாயிகளின் நலனைக் கருதி, செயற்கை உரங்களின் பயன்பாட்டை குறைக்க நடவடிக்கை எடுக்குமாறு மத்திய வேளாண் அமைச்சர் திரு. ஷிவ்ராஜ் சிங் சௌஹானிடம் வலியுறுத்தியுள்ளதாக பிஜேபி மாநிலத் தலைவர் திரு. நயினார் நாகேந்திரன் கூறியுள்ளார்.

இன்று புதுதில்லியில் மத்திய அமைச்சரை நேரில் சந்தித்த போது இக்கோரிக்கையை விடுத்ததாக சமூகவலைதளத்தில் அவர் குறிப்பிட்டுள்ளார்.

>>>><<<<

தமிழகத்தில் சட்டம் ஒழுங்கு முறையாக பராமரிக்கப்படுவதை உறுதி செய்வதற்கு தேவையான நடவடிக்கைகளை த.வெ.க. அரசு மேற்கொள்ள வேண்டும் என்று அஇஅதிமுக வலியுறுத்தியுள்ளது.

இதுதொடர்பாக அக்கட்சி வெளியிட்டுள்ள அறிக்கையில், ஆளும்கட்சி நிர்வாகிகள் தமிழகம் முழுவதும் பெண்களுக்கு எதிரான குற்றங்கள் உள்ளிட்ட சமூக விரோத செயல்களில் தொடர்ந்து ஈடுபட்டு வருவதாக குற்றம் சாட்டப்பட்டுள்ளது.

கட்சி நிர்வாகிகளையே கட்டுப்படுத்த முடியாத த.வெ.க அரசு, மக்களின் பாதுகாப்பிற்கு என்ன நடவடிக்கை மேற்கொள்ளப் போகிறது என்றும் அஇஅதிமுக அந்த அறிக்கையில் வினவியுள்ளது.

>>>><<<<

பயிர்க் கடன்களை முழுமையாக தள்ளுபடி செய்ய த.வெ.க அரசு நடவடிக்கை எடுக்க வேண்டும் என்று பாமக தலைவர் டாக்டர் அன்புமணி ராமதாஸ் கூறியுள்ளார்.

இதுதொடர்பாக இன்று அவர் வெளியிட்டுள்ள அறிக்கையில், மஹாராஷ்ட்ராவில் 55 லட்சம் விவசாயிகள் வாங்கிய 36 ஆயிரத்து 585 கோடி ரூபாய் மதிப்பிலான பயிர்க்கடன்கள் தள்ளுபடி செய்யப்பட்டிருப்பதை சுட்டிக்காட்டியுள்ளார்.

ஆனால், த.வெ.க அரசு 2 ஆயிரத்து 44 கோடி ரூபாய் அளவிற்குதான் பயிர்க் கடன் தள்ளுபடி செய்துள்ளதாக அவர் கூறியுள்ளார்.

பயிர்க்கடன்களை முழுமையாக தள்ளுபடி செய்ய விதிகள் தடையாக இல்லை என்றும், இதனை த.வெ.க. அரசு உணர வேண்டும் என்றும் டாக்டர் அன்புமணி ராமதாஸ் அந்த அறிக்கையில் கூறியுள்ளார்.

>>>><<<<

மக்களிடையே மனம் திறந்து பேசும் மன்கிபாத் நிகழ்ச்சியில், பிரதமர் திரு. நரேந்திர மோடி தம்மைப் பற்றி குறிப்பிட்டு பேசியது மகிழ்ச்சி அளிப்பதாக உள்ளது என்று ஆசிரியர் திருமதி. கிரிஜா கூறியுள்ளார்.

எமது செய்தியாளரிடம் பேசுகையில் அவர் இவ்வாறு கூறினார்.

(சவுண்ட் பைட் - கிரிஜா 61 செகண்ட்ஸ்)

>>>><<<<

தமிழ்நாடு கால்நடை மருத்துவ அறிவியல் பல்கலைக் கழகத்தில், நடப்பு கல்வியாண்டிற்கான இளநிலை பட்டப் படிப்பு மாணவர் சேர்க்கைக்கு வரும் 25ஆம் தேதி தொடங்கி அடுத்த மாதம் 15ஆம் தேதிவரை விண்ணப்பிக்கலாம் என்று அறிவிக்கப்பட்டுள்ளது.

இதுதொடர்பாக அப்பல்கலைக் கழகத்தின் சேர்க்கைக் குழுத் தலைவர் வெளியிட்டுள்ள செய்திக்குறிப்பில், இணையதளம் வாயிலாக மட்டுமே விண்ணப்பங்கள் ஏற்றுக் கொள்ளப்படும் என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.

விண்ணப்பங்களை அதற்கான இணையதளத்தில் விண்ணப்பிக்குமாறும் அந்த செய்திக்குறிப்பில் கேட்டுக் கொள்ளப்பட்டுள்ளது.

>>>><<<<

கன்னியாகுமரி மாவட்டத்திற்கு உட்பட்ட ஒரு சில பகுதிகளில் அடுத்த 5 தினங்களுக்கு கன முதல் மிக கனமழைக்கு வாய்ப்புள்ளதாக
வானிலை ஆய்வு மையத்தின் தென்மண்டல இயக்குநர் டாக்டர் வி.ஆர். துரை தெரிவித்துள்ளார்.

எமது செய்தியாளரிடம் பேசுகையில் அவர் இவ்வாறு தெரிவித்தார்.

(சவுண்ட் பைட் - துரை 47 செகண்ட்ஸ்)

>>>><<<<

மாவட்டச் செய்திகள்

நாமக்கல் மாவட்டம், பள்ளிப்பாளையம் அருகே இடி மின்னல் தாக்கியதில் உயிரிழந்தவரின் குடும்பத்தினருக்கு 4 லட்சம் ரூபாய் நிவாரண உதவித்தொகைக்கான காசோலையை மாநில அமைச்சர் திருமதி. விஜயலட்சுமி இன்று வழங்கினார்.

>>>><<<<

தென்காசி மாவட்ட ஆட்சியராக திரு. ரஞ்சித்தும், கோவை மாநகராட்சி ஆணையாளராக திரு. கட்டா ரவி தேஜா-வும் இன்று பொறுப்பேற்றுக் கொண்டனர்.

>>>><<<<

திண்டுக்கல் மாவட்டம், கொடைக்கானல் மற்றும் அதன் சுற்றுவட்டார பகுதிகளில் இரண்டாவது நாளாக இன்றும் அடர் பனிமூட்டம் நிலவுகிறது.

>>>><<<<

விளையாட்டுச் செய்திகள்

இந்தோனேஷிய ஓப்பன் பேட்மிண்டன் போட்டியில் இந்தியாவின் ஆயுஷ் ஷெட்டி காலிறுதிக்கு முந்தைய சுற்றுக்கு முன்னேறியுள்ளார்.

ஆடவர் ஒற்றையர் பிரிவு முதல் சுற்று ஆட்டத்தில் அவர், 8-21, 22-20, 21-15 என்ற செட்கணக்கில் சீனாவின் Weng Hong Yang-யை வென்றார்.

**>>>><<<<**

நார்வேயில் நடைபெற்ற சர்வதேச இளையோர் டேபிள் டென்னிஸ் போட்டியில், இந்தியாவின் **Abhinandh - Ananya** இணை தங்கப்பதக்கம் வென்றது.

**>>>><<<<**